

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினை திறந்து வைத்து, அதற்கான இலச்சினையை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர். மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி, வன உயிரின குற்றக்கட்டுப்பாட்டு பிரிவு இயக்குநர் திருமதி.காஞ்சனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிராமப்புற பள்ளிகளுக்கும் காலை சிற்றுண்டி விரிவாக்கம்!

## 25ம் தேதி திருக்குவளையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஆக. 9 -

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்து தொடங்கி வைத்தார்.

இதில் முதற்கட்டமாக மாநகராட்சி, நகராட்சி பகுதியில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கும் சிற்றுண்டி திட்டம் விரிவாக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

இதையடுத்து வரும் 25ம் தேதி திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது.

இதற்கான விழா, முன்னாள் முதல்வர் கலைஞர் படித்த நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெறுகிறது.

வரும் 25ம்தேதி காலை 8.30 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை சிற்றுண்டி உணவை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி தொடங்கி வைக்கிறார்.

இதைத்தொடர்ந்து கலைஞர் உரிமைத்தொகை பெற மனு செய்த மகளிருடன் முதல்வர் கலந்துரையாடுகிறார்.

### ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள்

# தமிழ்நாட்டில் எப்போது அமைக்கப்படும்?

## ஒன்றிய அரசிடம் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஆக. 9 -

தமிழ்நாட்டில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் எப்போது அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசிடம் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

அமராவதியில் அமைந்துள்ள பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைகள் பூங்கா (பி.எம். மித்ரா), மகாராஷ்டிராவின் ஜவுளி வர்த்தகத்திற்கு மேலும் வலுசேர்க்குமா என்றும், அவ்வாறு வலுசேர்க்கிறது என்றால் அமராவதியை ஜவுளி பூங்காவிற்கான இடமாக தேர்வு செய்ததில் மகாராஷ்டிராவின் "ஜவுளி மதிப்பு சங்கிலி" எவ்வித குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தது? பிரதமரின் மித்ரா ஜவுளிப் பூங்காவை நிறுவியதில் மகாராஷ்டிரா தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பங்களிப்பு விவரங்களைத் தெரியப்படுத்தவும்?

பிரதமரின் மித்ரா ஜவுளிப் பூங்கா மூலம் இந்தியா உலகளாவிய ஜவுளி உற்பத்தி மையமாக மாறுமா என்றும் ஜவுளிப் பூங்காவிற்கு எதிர்ப்பார்க்கப்படும் முதலீட்டின் விவரங்கள் குறித்து தெரியப்படுத்தவும். பிரதமரின் மித்ரா ஜவுளிப் பூங்கா மூலம் நேரடியாகவும் மறைமுகமாவும் உருவாக்கப்படும் வேலை வாய்ப்பு எவ்வளவு? அடிப்படையாக இருக்க வேண்டிய சாலை, தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை, இந்த ஜவுளிப் பூங்கா கொண்டுள்ளதா? தமிழ்நாட்டில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் அல்லது முன்மொழிவு உள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

### குன்னம் தொகுதி பொன்பரப்பி

# அரசினர் மாணவியர் விடுதியில் அடிப்படை வசதிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு!

அரியலூர், ஆக. 9 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம் குன்னம் தொகுதி பொன்பரப்பி அரசு மேல்நிலைப்பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவியர் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொன்பரப்பி அரசினர் மாணவியர் விடுதியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரியலூர் மாவட்டத்தில் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரால் துவக்கி வைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் செந்துறை ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளின் போது பொன்பரப்பி அரசு மேல்நிலைப்பள்ளி விடுதி மாணவிகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரை நேரில் சந்தித்து தங்களது விடுதிக்கு தேவையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, பழுதடைந்த சுற்றுச்சுவரினை சீரமைத்தல், கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை நிறைவேற்ற கோரிக்கை மனு வழங்கினர். மேலும், தங்களது விடுதியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மாணவிகளிடமிருந்து கோரிக்கை மனுவினை பெற்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சிவசங்கர் உடனடியாக பொன்பரப்பி அரசு மேல்நிலைப்பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியினை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வில் மாணவியர் விடுதியின் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் மாணவிகளிடம் குறைகளையும் கேட்டறிந்தார். பின்னர், மாணவிகளின் கோரிக்கையினை ஏற்று விடுதிக்கு உள்ளே குரங்குகள் வராமல் இருக்க உடனடியாக பாதுகாப்பு வலைகளை அடித்துத்தரவும், பழுதடைந்த சுவர்களை சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் உத்தரவிட்டார்.

மேலும், மாணவியரின் கோரிக்கையினை ஏற்று விடுதியின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் விடுதிக்கு தனது சொந்த செலவில் ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தரப்படும் எனவும் தெரிவித்ததுடன் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி விரைவில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். இதனால் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற உடனடி நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கருக்கு விடுதி மாணவிகள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர். இதே போன்று விடுதிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தாமதமின்றி நிறைவேற்றவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன் மற்றும் அரசு அலுவலர்கள், மாணவியர்கள், மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாளையொட்டி நகரச் செயலாளர் மிசா ஆறுமுகம் செந்தில் தலைமையில் அமைதி பேரணியில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ.தங்கம் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், டாக்டர் வை.முத்துராஜா, மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் ஆகியோர் முன்னிலையில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், அவைத்தலைவர் அரு.வீரமணி, லியாகத் அலி, வெ.மலர்விழி, ஆ.சிவக்குமார், கறம்பக்குடி கலிபுல்லா, ஆர்.சீனிவாசன் மற்றும் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### நெல்லை குமாரகபிலன் இலக்கிய அறக்கட்டளை

# நடத்தும் மரபுக்கவிதைப்போட்டி-2023

நெல்லை, ஆக. 9-

'ஆன்ற பெருமை தரும்' என்னும் தலைப்பில் 24 வரிகளுக்கு மிகாமல் மரபுக் கவிதை ஒன்று எழுதி அனுப்ப வேண்டுகிறோம். படைப்பாளர் முகவரியும் கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படமும் படைப்பு தம்முடையதே என்ற உறுதிமொழியும் தனித்தாளில் எழுதி இணைத்திட வேண்டும். கவிதை உள்ள தாளில் பெயர், முகவரி குறிப்புகள் எவையும் இருக்கக் கூடாது. கவிதை முழு வெள்ளைத்தாளில் எழுதியோ, கணினி தட்டச்சு செய்தோ மூன்று படிகள் அனுப்ப வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கவிதைக்கு முதல் பரிசாக உருபா - 3000/- இரண்டாம் பரிசாக உருபா 2000/- மற்றும் மூன்றாம் பரிசாக உருபா - 1000/- என பரிசளிக்கப்படும்.

கவிதை வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30.9.2023

படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி: கவிஞர் குமாரசுப்பிரமணியம்

செயலர், நெல்லை குமாரகபிலன் இலக்கிய அறக் கட்டளை,

தமிழ்மனை-854, இரண்டாம் தெரு, தி.வி.சுந்தரம் நகர்,

திருநெல்வேலி - 627 011

கைபேசி : 94438 52405



# தி.மு.க.
# இளைஞர் அணி

கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலுடன் பெருமைமிகு இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. அந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்திட, கழக நிர்வாகிகள் பலரும் நிதி அளித்து வருகின்றனர். நிதி அளித்தவர்கள் விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர், பொறுப்பு, கழக மாவட்டம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மதுரா செந்தில், மாவட்டச் செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்டம். | 1,00,00,000 |
| 2 | மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் | 51,00,000 |
| 3 | சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 15,00,000 |
| 4 | சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 5 | சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 6 | சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 7 | சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 8 | சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 9 | மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், சேலம் கிழக்கு மாவட்டம். | 10,00,000 |
| 10 | ஆர்.டி.சேகர், கழக தணிக்கைக் குழு உறுப்பினர், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். | 5,00,000 |
| 11 | இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். | 2,00,000 |
| 12 | பி.எம்.சரவணன், மாநகர மேயர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்டம். | 1,00,000 |
| 13 | ஏ.எம்.ஜி.விஜய்குமார், அரியமங்கலம் பகுதிக் கழகச் செயலாளர், கிழக்கு மாநகரம், திருச்சி தெற்கு மாவட்டம். | 1,00,000 |
| | மொத்தம் | 2,35,00,000 |

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 08–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

### கொடைக்கானல் செல்லதுரை தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## சவுதி அரேபியா வெங்கடேசன் - ஆரீஃப் மக்பூல் பங்கேற்பு!

கொடைக்கானல், ஆக. 9 -

கொடைக்கானல் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி நகர அவைத் தலைவர் மரிய ஜெயந்தன் தலைமையில் நடந்தது.

முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவஞ்சலி நிகழ்வில் கொடைக்கானல் நகர் மன்ற தலைவர் செல்லத்துரை தலைமை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் சவுதி அரேபியா அயலக அணி மயிலாடுதுறை வெங்கடேசன், சவுதி அரேபியா அயலக அணி திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணை தலைவர் மாயக்கண்ணன், நகர பொருளாளர் முகமது நயினார், நகர துணைச் செயலாளர்கள் சுப்பிரமணி, கோமதி, மாவட்ட பிரதிநிதிகள், கே.பி.என்.எம்.இளங்கோவன், சுதாகர், நகர் மன்ற உறுப்பினர்கள், கொடைக்கானல் நகர தி.மு.க. நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், அனைத்து அணியின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோ. செங்குட்டுவன்
## ஆகஸ்ட் 9 (1996)



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**